தினமணி

வியாழக்கிழமை, 30 ஏப்ரல் 2026

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் தேரோட்டம்

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம்

மதுரை, ஏப். 29: மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் சித்திரைத் திருவிழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் புதன்கிழமை நடைபெற்றது. இதில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று தேரை வடம்பிடித்து இழுத்து சுவாமியை தரிசித்தனர்.

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் சித்திரைத் திருவிழா கடந்த 19-ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவின் முக்கிய நிகழ்வான மீனாட்சி - சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதைத் தொடர்ந்து, தேரோட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

இதையொட்டி, கோயில் வளாகத்தில் உள்ள முத்தம்பல முதலியார் கட்டளை, ராமநாதபுரம் சேதுபதி மகாராஜா மண்டகப்படிகளில் புதன்கிழமை அதிகாலை 4 மணிக்கு சுவாமி, அம்மன் எழுந்தருளினர். அங்கு சிறப்பு பூஜைகள், தீபாராதனைகள் நடைபெற்றன. இதையடுத்து, அதிகாலை 5.15 மணிக்கு பிரியாவிடையுடன் சுந்தரேசுவரர் பெரிய தேரிலும், மீனாட்சி அம்மன் சிறிய தேரிலும் எழுந்தருளினர்.

பின்னர், தேர்களுக்கும், தேரடியில் அமைந்துள்ள கருப்பணசுவாமிக்கும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. காலை 6.18 மணிக்கு பெரிய தேருக்கும், காலை 6.25 மணிக்கு சிறிய தேருக்கும் வடம் பிடிக்கப்பட்டது.

மதுரை மாவட்ட ஆட்சியர் கே.ஜே. பிரவீன்குமார், மதுரை மாநகர காவல் ஆணையர் அபிஷேக் தீக்ஷித், கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ருக்மணி பழனிவேல் ராஜன், கோயில் இணை ஆணையர் நா. சுரேஷ் ஆகியோர் வடம் பிடித்து தேரோட்டத்தைத் தொடங்கிவைத்தனர். தேருக்கு முன்பாக அலங்கரிக்கப்பட்ட யானையும், கணபதி, சுப்பிரமணியர் சப்பரங்களும் சென்றன.

தேரில் சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளிய மீனாட்சி அம்மன், பிரியாவிடையுடன் சுந்தரேசுவரர்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள், கல்லூரி மாணவர்கள், பக்தர்கள், பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்று, தேர்களை வடம் பிடித்தனர். இந்தத் தேர்கள் நான்கு மாசி வீதிகளின் வழியாக வலம் வந்தன.

மக்கள் வெள்ளத்தில் மாசி வீதிகள்: தேரோட்டத்தையொட்டி, புதன்கிழமை அதிகாலையிலிருந்தே பக்தர்கள் மாசி வீதிகளில் திரண்டனர். மேலும், மாசி வீதிகளில் உள்ள உயரமான கட்டடங்களிலும் ஏராளமான பக்தர்கள் திரண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

தேர்களுக்கு முன்பாக கைலாய வாத்தியங்களை மீட்டியபடியும், சிவனடியார்கள் தேவாரம், திருவாசகப் பாடல்களைப் பாடியவாறும் சென்றனர். பக்தர்கள் இடைவிடாது பக்தி முழக்கங்களை எழுப்பினர். நான்கு மாசி வீதிகள் வழியாக வலம் வந்து சுந்தரேசுவரர் தேர் பகல் 12.05 மணிக்கும், மீனாட்சி அம்மன் தேர் பகல் 12.35 மணிக்கும் நிலையை வந்தடைந்தன. தீபாராதனை, சிறப்பு பூஜைகள் நடைபெற்ற பின்னர், பிரியாவிடையுடன் சுந்தரேசுவரர், மீனாட்சி அம்மன் கோயிலுக்கு புறப்பாடாகினர்.

தேரோட்டத்தையொட்டி, மாசி வீதிகள், மீனாட்சி அம்மன் கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் பல்வேறு தன்னார்வ அமைப்புகள் சார்பில் பக்தர்களுக்கு மோர், குடிநீர், குளிர்பானங்கள், சர்க்கரைப் பொங்கல், புளியோதரை உள்ளிட்ட உணவுகள் வழங்கப்பட்டன. மாநகர காவல் ஆணையர் அபிஷேக் தீக்ஷித் தலைமையில், துணை ஆணையர்கள் உள்பட 2,500 -க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

சப்தாவர்ண சப்பரம்: இரவு நிகழ்வாக பிரியாவிடையுடன் சுந்தரேசுவரர், மீனாட்சி அம்மன் கோயிலிலிருந்து சப்தாவர்ண சப்பரத்தில் எழுந்தருளி நான்கு மாசி வீதிகளில் வலம் வந்தனர்.

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் சித்திரைத் திருவிழாவையொட்டி, புதன்கிழமை நடைபெற்ற தேரோட்டம்.

இன்று 6 மாவட்டங்களில் பலத்த மழைக்கு வாய்ப்பு

சென்னை, ஏப். 29: நீலகிரி, கோவை உள்பட 6 மாவட்டங்களில் வியாழக்கிழமை (ஏப். 30) பலத்த மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

வட உள் கர்நாடகம் முதல் மன்னார் வளைகுடா வரை, தென் உள் கர்நாடகம் மற்றும் தமிழகம் வழியாக செல்லும் காற்றுப் பாதையில் இடையூறு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, ஏப். 30, மே 1, 2 தேதிகளில் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது.

வியாழக்கிழமை (ஏப். 30) நீலகிரி, கோவை, ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களிலும், மே 1-இல் நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், தேனி மாவட்டங்களிலும், மே 2-இல் நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி, மதுரை, சிவகங்கை, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் பலத்த மழைக்கு வாய்ப்புள்ளது.

வேலூரில் 106.7 டிகிரி: தமிழகத்தில் புதன்கிழமை அதிகபட்சமாக வேலூரில் 106.7 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பம் பதிவானது. மேலும், மதுரை விமான நிலையம், பரமத்திவேலூர் - (தலா) - 104.36, திருச்சி - 104.18, ஈரோடு, மதுரை நகரம் - (தலா) 103.28, திருத்தணி - 103.1, சென்னை மீனம்பாக்கம் - 102.74, தருமபுரி - 102.2, திருப்பத்தூர் - 101.28, நாமக்கல் - 101.3, தஞ்சாவூர், நாகை - (தலா) 100.4 டிகிரி என மொத்தம் 13 இடங்களில் வெயில் சதமடித்தது.

தொடர்ந்து, தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஏப். 30 முதல் மே 3-ஆம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை இயல்பைவிட அதிகமாக இருக்கும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை வியாழக்கிழமை 102 டிகிரி ஃபாரன்ஹீட்டையொட்டி இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருச்செந்தூர் கோயிலில் வேல் ஏந்தி வழிபட்ட அமைச்சர்கள்

திருச்செந்தூர், ஏப். 29: திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் அமைச்சர்கள் பி.கே.சேகர் பாபு, அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் வேல் ஏந்தி வந்து மூலவரை தரிசித்தனர்.

திருச்செந்தூர் கோயிலில் வேல் ஏந்தி வந்து வழிபட்ட அமைச்சர்கள் பி.கே.சேகர் பாபு, அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை மே 4-ஆம் தேதி நடைபெறுகிறது. இதனிடையே, தேர்தலில் வெற்றிபெற வேண்டி திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு அரசியல் பிரமுகர்கள் வந்த வண்ணம் உள்ளனர்.

முன்னதாக தவெக தலைவர் விஜய் செவ்வாய்க்கிழமை வந்து சுவாமி தரிசனம் செய்துவிட்டு சென்ற நிலையில், அதிமுகவிலிருந்து முன்னாள் அமைச்சர்கள் ஆர்.பி.உதயகுமார், அன்பழகன், ராஜேந்திரபாலாஜி வந்து தரிசித்து சென்றனர்.

இந்த நிலையில், இந்துசமய அறநிலையத் துறை அமைச்சரும், துறைமுகம் தொகுதி திமுக வேட்பாளருமான பி.கே.சேகர்பாபு, மீன்வளம், மீனவர் நலன், கால்நடைத் துறை அமைச்சரும் திருச்செந்தூர் தொகுதி திமுக வேட்பாளருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் புதன்கிழமை காலை வந்து சுவாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து அமைச்சர்கள் சண்முக விலாச மண்டபத்தில் இருந்து கைகளில் வேல் ஏந்தியவாறு உள்ளே சென்று மூலவரான முருகப் பெருமானை சிறப்பு அலங்காரத்தில் வழிபட்டனர்.

தேரோட்டம்...

கள்ளக்குறிச்சி மாவட்டம் கூவாகத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஸ்ரீகூத்தாண்டவர் கோயில் சித்திரைத் திருவிழா தேரோட்டம்.

'சொல் புதிது' திட்டம்: 28 சொற்கள் இறுதி

சென்னை, ஏப். 29: தமிழ் வளர்ச்சிக் கழகம் சார்பில் சென்னையில் நடைபெற்ற 'சொல் புதிது' திட்டக் கூட்டத்தில் ஆங்கிலச் சொற்களுக்கு இணையாக 28 தூய தமிழ்ச் சொற்கள் இறுதி செய்யப்பட்டன.

தமிழ் வளர்ச்சிக் கழகம் சார்பில் சொல் புதிது என்ற திட்டத்தின் 12-ஆவது கூட்டம் சென்னையில் உள்ள தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் அதன் தலைவர் ம.இராசேந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பேராசிரியர்கள் மு. இராமசுவாமி, சா.சரவணன், ம.இளங்கோவன், தி.கமலி, இரா. கஸ்தூரி ராஜா, பாரதி பாலன், ஊடகவியலாளர்கள் ராஜ் கண்ணன், விஜயகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், ஆட்ஹோக் பேமென்ட் - இடைக்காலப் பயன்தொகை, அவலான்ச்சி - பனிச்சரிவு, க்ரோனிக் நியூராலஜிக்கல் டிஸார்டர் - முற்றிய நரம்பியல் நோய், எலிஃபன்ட் காரிடார் - யானை வழித்தடம், ஃப்ளை ஏஷ் பிரக் - சாம்பல் செங்கல், ப்ரோஸ் அண்ட் கான்ஸ் - நிறை குறை, பப்பெட் மாஸ்டர் - ஆட்டுவிப்பவர், க்விஸ் மாஸ்டர் - வினாடி-வினா நடத்துநர், சோபர் டயலாக் - சமநிலைக் கருத்தாடல் ஆகிய சொற்கள் உள்பட 28 ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தூய தமிழ்ச் சொற்கள் இறுதி செய்யப்பட்டன.

இந்தியன் வங்கி — பார்க் டவுன் கிளை
53, ராஜா முத்தையா சாலை, பெரியமேடு, சென்னை - 600 003. தொலைபேசி : 044-2561 5446/0422. மின்னஞ்சல் : parktown@indianbank.bank.in

சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்களுக்கு)

கீழே கையொப்பமிட்டுள்ள இந்தியன் வங்கி, பார்க் டவுன் கிளையின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க விதி 3-க்கு ஏற்ப கடன்தாரர்கள் : **(1) திரு. ஜான் கிறிஸ்டோஃபர் தேவசகாயம், (கடன்தாரர்/அடமானதாரர்),** 3/37, சிவசக்தி கட்டிடம், செல்வி அம்மன் கோயில் முதல் தெரு, கிழக்கு தாம்பரம், இரும்புலியூர், சென்னை - 600 045, **(2) திரு. ரிச்சர்ட் கிறிஸ்டோஃபர் தேவசகாயம், (இணை-கடன்தாரர்/ஜாமீன்தாரர்),** 3/37, சிவசக்தி கட்டிடம், செல்வி அம்மன் கோயில் முதல் தெரு, கிழக்கு தாம்பரம், இரும்புலியூர், சென்னை - 600 045, ஆகியோருக்கு **06.01.2026** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பு அனுப்பி அதில் குறிப்பிட்டுள்ளபடி செலுத்த வேண்டிய தொகையான **ரூ.1,72,50,792/- (ரூபாய் ஒரு கோடியே எழுபத்து இரண்டு லட்சத்து ஐம்பதாயிரத்து எழுநூற்று தொண்ணூற்று இரண்டு மட்டும்)** அத்துடன் 06.01.2026 முதல் திரும்பச் செலுத்தும் தேதி வரை மேலதிக வட்டி மற்றும் பிற கட்டணங்கள், செலவுகளுடன் சேர்த்து மேற்சொன்ன அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் தொகையை திரும்ப செலுத்துமாறு கேட்டுக்கொண்டிருந்தார்.

23.04.2026 தேதி வரை உள்ள வீட்டு கடன் வசதிக்கான தற்போதைய நிலுவைத் தொகை **ரூ.1,80,40,658/- (ரூபாய் ஒரு கோடியே எண்பது லட்சத்து நாற்பதாயிரத்து அறுநூற்று ஐம்பத்து எட்டு மட்டும்)** அத்துடன் மேலதிக வட்டி, செலவுகள் மற்றும் பிற கட்டணங்களும் சேரும்.

சம்பந்தப்பட்ட கடன்தாரர்கள் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாக அறிவிக்கப்படுவது என்னவெனில் கீழ் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை மேற்சொன்ன சட்டத்தின் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க விதி 8-க்கு இணங்கவும், **24 ஏப்ரல், 2026** அன்று கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரி சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார்.

கடன்தாரர்/அடமானதாரருக்கு குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக்கொண்ட இந்த சொத்து இந்தியன் வங்கிக்கு **23.04.2026** தேதி வரை செலுத்த வேண்டிய தொகையான **ரூ.1,80,40,658/- (ரூபாய் ஒரு கோடியே எண்பது லட்சத்து நாற்பதாயிரத்து அறுநூற்று ஐம்பத்து எட்டு மட்டும்)** மற்றும் 24.04.2026 முதல் திரும்பச் செலுத்தும் தேதி வரை மேலதிக வட்டி மற்றும் செலவுகள், பிற கட்டணங்களுடன் சேர்த்து பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித நடவடிக்கைகளும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக்கொள்ள கூடாது அப்படி வைத்துக்கொண்டால் அது இந்தியன் வங்கிக்கு செலுத்த வேண்டிய பிணைய தொகைக்கு உட்பட்டது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

"SARFAESI சட்டம் பிரிவு 13(8) ஷரத்துகளின் கீழ் அமைக்கப்பட்ட விதிகளின்படி சொத்துக்களை மீட்டுக்கொள்ள உங்களுக்கு உள்ள உரிமையை கவனத்தில் கொள்ளவும்".

அசையா சொத்தின் விவரம்

பிணையமாக அளிக்கப்பட்டுள்ள அடமான சொத்தின் முக்கிய விபரங்கள் பின்வருமாறு :

அடமான சொத்து - அட்டவணை அ (ஈட்டு அடமானத்தின் கீழ் உள்ள சொத்தின் விவரம்) : உத்தண்டி கிராமம், சோழிங்கநல்லூர் தாலுகா, சென்னை மாவட்டத்தில் உள்ள காலி வீட்டு மனைகளின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும். 600 சதுர அடி பரப்பளவு கொண்ட மனை எண்.126 மற்றும் 750 சதுர அடி பரப்பளவு கொண்ட மனை எண்.127, மொத்தம் 1350 சதுர அடி பரப்பளவு கொண்டது. பட்டா எண்.26648-ன்படி சர்வே எண்.30/2, பட்டாவின்படி துணை பிரிவு சர்வே எண்கள், 30/2A2 மற்றும் 30/2A4, முன்னர் "S.V.S. River View Residency" தற்போது "Bingala Beach" என அழைக்கப்படும் திட்டத்தில் அடங்கியுள்ளது. நிலத்தின் எல்லைகள் - வடக்கில் : மனை எண்.125, தெற்கில் : 23 அடி ரோடு, கிழக்கில் : 20 அடி ரோடு, மேற்கில் : மனை எண்கள்.128 & 129. நேரியல் அளவீடு பின்வருமாறு - கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கத்தில் : 30 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கத்தில் : 30 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கத்தில் : 45 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பக்கத்தில் : 45 அடி. மொத்தம் 1350 சதுர அடி பரப்பளவு கொண்டு சென்னை தெற்கு பதிவு மாவட்டம் மற்றும் நீலாங்கரை துணை பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. **அட்டவணை ஆ (ஈட்டு அடமானத்தின் கீழ் உள்ள சொத்தின் விவரம்) :** அட்டவணை அ-வில் குறிப்பிட்டுள்ள சொத்தில் 750 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு கொண்ட சொத்து. நிலத்தின் எல்லைகள் - வடக்கில் : மனை எண்.126, தெற்கில் : 23 அடி ரோடு, கிழக்கில் : 20 அடி ரோடு, மேற்கில் : மனை எண்.128. நேரியல் அளவீடு பின்வருமாறு - கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கத்தில் : 30 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கத்தில் : 30 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கத்தில் : 25 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பக்கத்தில் : 245 அடி **அட்டவணை இ (சொத்தின் விவரம்) :** மனை எண்.127, S.V.S. River View Residency" தற்போது "Bingala Beach" என அழைக்கப்படுகிறது. உத்தண்டி கிராமம், சோழிங்கநல்லூர் தாலுகா, சென்னை மாவட்டத்தில் உள்ள "Evergreen Capital" என பெயரிடப்பட்ட குடியிருப்பு கட்டிடத்தில் 1650 சதுர அடி சூப்பர் கட்டிட பரப்பளவு (பொது பகுதி உட்பட) கொண்ட தரை மற்றும் முதல் தளத்தில், தெற்கு நோக்கி உத்தேசிக்கப்பட்டுள்ள குடியிருப்பு ஃபிளாட் வில்லா எண்.A, ஒரு கவர்டு கார் நிறுத்தம் உட்பட (பெருநகர சென்னை மாநகராட்சியால் அளிக்கப்பட்டுள்ள திட்டமிடல் அனுமதி எண். PPA/WDCN15/00953/2021 மற்றும் கட்டிட அனுமதி எண். BA/WDCN15/01178/2021).

தேதி : 24.04.2026 — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
இடம் : சென்னை — இந்தியன் வங்கி.

MANAPPURAM FINANCE LTD.
CIN: L65910KL1992PLC006623,
Registered Office: W - 4/ 638A, Manappuram House,
P.O. Valapad, Thrissur - 680 567, Kerala, India

தங்க நகைகள் பொது ஏலம்

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கீழ்க்கண்ட கிளைகளில் 16.05.2026 தேதி அன்று காலை 10 மணி யில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பின்றி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும்.வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.

அடமானங்களின் பட்டியல் :
கொளத்தூர், 0117300700041082, எம் டி எச் ரோடு வில்லிவாக்கம் சென்னை, 0106390700049564, கடலூர், விருதாச்சலம், 0123580700067284, கள்ளக்குறிச்சி, உளுந்தூர்பேட்டை, 0121320700056317, புதுச்சேரி, நேரு தெரு புதுச்சேரி, 0120470700021134,

மேற்கண்ட ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள் பின்வருவனவற்றைப் பின்பற்ற வேண்டும்: ஆர்வள்ள ஏலதாரர்கள், ஏலம் நடைபெறும் அதே நாளில், ரூ. 10,000/- தொகையை ஈஎம்டி ஆக (வெற்றி பெறாத ஏலதாரர்களுக்குத் திருப்பித் தரப்படும்) என்இஎஃப்டி/ஆர்டிஜிஎஸ் மூலம் செலுத்த வேண்டும். ஏலத்தில் பங்கேற்பவர்கள் செல்லுபடியாகும் அடையாள அட்டை/பான் கார்டை வைத்திருக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 09072607147 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
மணப்புரம் பைனான்ஸ் லிமிடெட்-க்காக

பாங்க் ஆஃப் பரோடா செம்புதாஸ் தெரு கிளை
बैंक ऑफ़ बड़ौदा Bank of Baroda
80/81, பிரகாசம் சாலை, பிராட்வே, சென்னை — 600108
தொலைபேசி : 044- 25227207, 25262609

சுவாதீன அறிவிப்பு

கீழே கையொப்பமிட்டுள்ள பாங்க் ஆஃப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் 2002ம் (54 of 2002) ஆண்டு கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும் மேற்சொன்ன சட்டத்தின் 13 (12) வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும் 2002ம் ஆண்டு கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க விதி 3க்கு ஏற்பவும், **M/s. குமார் ஏஜன்சீஸ், பிரதிநிதியாக அதன் உரிமையாளர் திரு. A.விஜயகுமார்.** பதிவு அலுவலகம் எண் 9, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை - 600 001 மற்றும் **திரு. A.விஜயகுமார் (உரிமையாளர் M/s குமார் ஏஜன்சி)** மற்றும் **திருமதி V.கவிதா (ஜாமீன்தாரர்)** இருவரின் முகவரி A-5/456, 2-வது தளம், கேந்திரிய விஹார் அடுக்குமாடி குடியிருப்புகள், பூந்தமல்லி நெடுஞ்சாலை, வேலப்பஞ்சாவடி, சென்னை - 600077 ஆகியோர் 11.02.2026 தேதிப்படி செலுத்த வேண்டிய தொகை **ரூ. 31,70,125.16/- (ரூபாய் முப்பத்து ஒரு இலட்சத்து எழுபதாயிரத்து நூற்று இருபத்து ஐந்து மற்றும் பதினாறு பைசா மட்டும்)** மேலும் வட்டி, மேலதிக வட்டி, நிலுவையில் உள்ள வட்டி, இதர கட்டணங்கள், ஆகியவற்றை 60 நாட்களுக்குள் செலுத்தக்கோரி **12.02.2026** அன்று தேதியிட்ட கோரிக்கை அறிவிப்புகளில் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

சம்பந்தப்பட்ட கடன்தாரர் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்தத் தவறியதால் கடன்தாரர் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 13(4)ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், விதிமுறைகளின் விதி 8க்கு இணங்கவும், **24.04.2026** அன்று கீழே கையொப்பமிட்டுள்ள அதிகாரி அசையா சொத்தினை சுவாதீனம் எடுத்துள்ளார்.

இந்த அறிவிப்பின் மூலம் குறிப்பாக கடன்தாரர் / ஜாமீன்தாரர்/அடமானதாரர் பொதுவாக பொது மக்களுக்கு எச்சரிக்கப்படுவது என்னவென்றால், சுவாதீனம் எடுத்துக்கொண்ட இந்த சொத்துக்கள் **பாங்க் ஆஃப் பரோடா வங்கிக்கு 19.04.2026** தேதிப்படி செலுத்த வேண்டிய தொகையான **ரூ. 32,45,416.03/- (ரூபாய் முப்பத்திரண்டு இலட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து நானூற்றுப் பதினாறு மற்றும் மூன்று பைசா மட்டும்)**. மேலும் 20.04.2026 முதல் வட்டி, மேலதிக வட்டி, இதர கட்டணங்களுக்கு பிணையாக உள்ளது என்பதால் யாரும் கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் மீது எந்தவித நடவடிக்கைகளும் மற்றும் தொடர்புகளும் வைத்துக்கொள்ளக் கூடாது என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

SARFAESI சட்டத்தின் 13(8) விதிகளின்படி பாதுகாப்பு மற்றும் அதன் விதிகளுக்காகவும் தங்கள் கவனத்திற்காகவும் இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

அசையா சொத்து விவரம்

திருவள்ளூர் மாவட்டம் அம்பத்தூர் தாலுகா நூம்பல் கிராமம் சர்வே எண்கள் 77/9, 78/4, 83/1, 83/2, 84/1, 84/2 மற்றும் 85/1-ன் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள "கேந்திரிய விஹார் அடுக்குமாடி குடியிருப்பு" வேலப்பன்சாவடியில் உள்ள அடுக்கு மாடி குடியிருப்பின் இரண்டாம் தளத்தில் A5 பிளாட்டில் உள்ள இரண்டாவது தளம் பிளாட் எண் A-5/456ன் 512 சதுர அடி கட்டுமான பரப்புடன் மொத்தம் 2,90,961.25 சதுர அடி நிலத்தில் 347.66 சதுர அடி பிரித்தும் பிரிக்கப்படாத பங்கு நிலம் / நிலத்தில் உரிமை உள்ள நிலம் அதனுடன் அனைத்து பொருத்துகள் மற்றும் மின்சார இணைப்பு, அதன் பொருத்துகள் மற்றும் அதன் வைப்புத் தொகை மற்றும் இதர பொதுவான வசதிகள் உருவாக்கப்பட்டுள்ள கட்டிடத்துடன் கூடிய நிலம் அதன் துண்டுகளும் பகுதிகளும். **எல்லைகள்: வடக்கு:** பூந்தமல்லி நெடுஞ்சாலை, **தெற்கு:** சர்வே எண்கள் 82/2 மற்றும் 82/1, **கிழக்கு:** சர்வே எண்கள் 82/1, 83/4, 84/3 & 85/2, **மேற்கு:** சர்வே எண்கள் 76, 77, 78 & 79. இச் சொத்து தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் குன்றத்தூர் சார் பதிவு மாவட்டத்தில் உள்ளது.

இடம் : சென்னை — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
தேதி : 24.04.2026 — பாங்க் ஆஃப் பரோடா

கனரா வங்கி
சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை II, சென்னை [7901]
எண்.9 & 10, சர் தியாகராய சாலை, தியாகராய நகர், சென்னை-17
தொலைபேசி எண். 9740145622
மின்னஞ்சல் : cb7901@canarabank.com

சுவாதீன அறிவிப்பு பிரிவு 13(4) (அசையா சொத்திற்கானது)

கீழே கையொப்பமிட்டுள்ள **கனரா வங்கியின்** அதிகாரபூர்வ அதிகாரியானவர், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கம் சட்டம் பிரிவு 13(12) மற்றும் விதி 3ன் கீழும் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க (2002ல் சட்டம் 54) சட்டத்தின் கீழும் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி கடன்தாரர் **M/s Spinneret Logistics Solutions Private Limited,** பிரதிநிதியாக **திரு.குருபிரசாத்.S (இயக்குநர்), திருமதி.V.லதா, க/பெ. T.விஜயேந்திரன் (இயக்குநர்)** மற்றும் **திருமதி. மகேஸ்வரி (இயக்குநர்)**, ஆகியோர்களுக்கு **19.01.2026** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பினை அனுப்பி அதில் கானும் **31.12.2025** அன்றுள்ளபடி கடன் தொகையான **ரூ.40,24,738.78/- (ரூபாய் நாற்பது இலட்சத்து இருபத்து நான்கு ஆயிரத்து எழுநூற்று முப்பத்து எட்டு மற்றும் பைசா எழுபத்து எட்டு மட்டும்)** மேலும் எதிர்கால வட்டியுடன் சேர்த்து இந்த அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரியிருந்தார்.

கடன்தாரர்களின் பெயர் மற்றும் முகவரி: **M/s Spinneret Logistics Solutions Private Limited,** முகவரி.1) 3/344, கங்கை தெரு, சோழன் நகர், அம்மாசத்திரம், கும்பகோணம், தஞ்சாவூர், தமிழ்நாடு-612103. முகவரி.2) எண்.13, பேபி நகர் பிரதான சாலை, பேபி நகர், மாடம்பாக்கம், கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு -603202. முகவரி.3) GF, 174 2C 2A, அனுமேப்பள்ளி, ஜுஜுவாடி, ஒசூர், தமிழ்நாடு-635109. **திரு.குருபிரசாத்.S** த/பெ. **சுகவனேஸ்வரன் (இயக்குநர்),** முகவரி.1) 3/344 கங்கை தெரு, சோழன் நகர், அம்மாசத்திரம், தஞ்சாவூர், தமிழ்நாடு-612103. முகவரி.2) எண்.12, உஷா நகர், 2வது தெரு, உள்ளகரம், சென்னை -600091. **3. திருமதி. மகேஸ்வரி (இயக்குநர்),** மனை எண் 31A, கதவு எண்.14A1, 9வது குறுக்கு தெரு, திருவள்ளுவர் நகர், கொடுங்கையூர், சென்னை - 600118. **4. திரு. சுகவனேஸ்வரன் R (ஜாமீன்தாரர்),** 3/344 கங்கை தெரு, சோழன் நகர், அம்மாசத்திரம், கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் - 612103. **5. திருமதி.V.லதா, க/பெ, T.விஜயேந்திரன் (இயக்குநர்),** ஃப்ளாட் எண் 302, 3வது தளம், சத்தியநாராயணபுரம், திருப்பதி, ஆந்திரப் பிரதேசம் 517501.

கடன்தாரர்கள் பாக்கித் தொகையை திரும்ப செலுத்த தவறிவிட்டதால் கடன்தாரர்கள் மற்றும் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பதாவது மேற்படி சட்டம் பிரிவு 13(4) மற்றும் அதற்கு தொடர்புடைய 8 மற்றும் 9வது விதியின் கீழ் அதிகாரப்பூர்வ அதிகாரியானவர் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை **28.04.2026** அன்று சுவாதீனம் செய்துள்ளார்.

கடன்தாரர்கள் குறிப்பாக பொதுவாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவதாவது சுவாதீனமான சொத்து விஷயத்தில் எவ்வித பேரமும் வைத்துக்கொள்ளக்கூடாது மீறி வைத்துக் கொண்டால் அது **கனரா வங்கிக்கு** செலுத்தப்பட வேண்டிய **25.03.2026** அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகையான **ரூ.41,86,003.40/- (ரூபாய் நாற்பத்து ஓர் இலட்சத்து எண்பத்து ஆறு ஆயிரத்து மூன்று மற்றும் பைசா நாற்பது மட்டும்)** அதனுடன் எதிர்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள் சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்டப் பிரிவு 13(8) ஷரத்துக்களின்படி கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அசையாச் சொத்தின் விளக்கம்

மூல ஆவணதாரர் பெயர் திரு. சுகவனேஸ்வரன் R (05.08.1997 தேதியிட்ட விற்பனை ஆவண எண்.1118/1997 இன்படி) திருவிடைமருதூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உட்பட்ட, தமிழ்நாடு - 612103, தஞ்சாவூர் மாவட்டம், தற்போது திருவிடைமருதூர் வட்டம், கும்பகோணம் வட்டம், திருபுவனம் அஞ்சல், அம்மாசத்திரம் கிராமத்தின் R.சர்வே எண்:11/4-பகுதி, பட்டாவின்படி புதிய சர்வே எண்.29/15 இல் அடங்கிய சக்குவம்பாளரம், சோழன் நகர், கங்கை தெரு, கதவு எண்.3/344, மனை எண்.81 இன் பரப்பளவு 2252சதுர அடி நிலம் அதனுடன் அதில் கட்டப்பட்டுள்ள பரப்பளவு 475சதுர அடி விஸ்தீரணங்கொண்ட கட்டிடம், நிலம் மற்றும் கட்டிடம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, கீழே குறிப்பிட்டுள்ளவாறு நிலத்தின் எல்லைகள்: வடக்கில்: மனை எண்.80; தெற்கில்: மனை எண்.82; கிழக்கில்: 20அடி சாலை; மேற்கில்: மனை எண்.74; நிலத்தின் நாற்பரப்புகள்: கிழக்கு மேற்காக வட புறம்: 55.00அடி; கிழக்கு மேற்காக தென் புறம்: 52.60அடி; வடக்குத் தெற்காக கிழக்கு புறம்: 40.00அடி; வடக்குத் தெற்காக மேற்கு புறம்: 40.00அடி; நிலத்தின் பரப்பளவு: 2252சதுர அடி. CERSAI ID : 400058743466

நாள் : 28.04.2026, இடம் : சென்னை — அதிகாரபூர்வ அதிகாரி, கனரா வங்கி

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

IndusInd Bank Limited
பதிவு அலுவலகம் : எண். 25, ஸ்டீப்பிள் ரீச், A பிளாக், மூன்றாவது தளம், கதீட்ரல் சாலை, கோபாலபுரம், சென்னை-600 001 | இணையதளம்: www.indusind.com

பொது அறிவிப்பு

(கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள்-2002, விதி 3(1)ன் கீழ்) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13 (2)-இன் கீழ் மாற்றுசேவை அறிவிப்பு.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்களுக்கு இதன்மூலம் அறிவிப்பது என்னவென்றால், அவர்கள் **இண்டஸ்இண்ட் பேங்க் லிட். (IBL)** வங்கியிடமிருந்து கடன் வசதிகள் பெற்று அவற்றை முறையாகத் திருப்பி செலுத்தவில்லை என்பதால், வங்கியின் கணக்கு புத்தகங்களில் RBI வழிகாட்டுதல்களின்படி அவர்கள் கணக்குகள் **செயல்படாச் சொத்துகள்** என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 பிரிவு 13 (2)-இன் கீழ் (சர்ஃபாசி சட்டம்) தொடர்புள்ள மேற்சொன்ன கடன்தாரர்களின் கடைசியாக தெரிந்த முகவரிக்கு வங்கியானது **கோரிக்கை அறிவிப்பு** அனுப்பி, அவரவருக்கான கோரிக்கை அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் பாக்கித் தொகை அதனுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகைமீதான கீழே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள்படி ஒப்பந்த விகிதத்தில் மேல் வட்டி, எதிர்பாரா செலவுகள், செலவினங்கள், கட்டணங்கள் ஆகியவற்றை சேர்த்து அவரவருக்கான கோரிக்கை அறிவிப்புகள் நாளில் இருந்து 60 நாள்களுக்குள் முழுமையாக செலுத்துமாறு கேட்டு கொள்ளப்பட்டது. ஆனாலும், கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள்- 2002, விதி 3-ன் கீழ் (சர்ஃபாசி விதிகள்) இந்த அறிவிப்பு வெளியிடுவதன் மூலம் எங்களால் மாற்று சேவை செய்யப்படுகிறது.

கடன் கணக்கு எண்: TCF00708N; NPA நாள்: 06/12/2025; 13 (2) அறிவிப்பு நாள்:18/04/2025; 10/12/2025 அன்றுள்ளபடி இன்னும் பாக்கி உள்ளதும் நீங்கள் செலுத்த வேண்டியதுமான நிலுவைத் தொகை: ரூ. 24,28,117.70 பைசா (ரூபாய் இருபத்து நான்கு லட்சத்து இருபத்து எட்டு ஆயிரத்து நூற்று பதினேழு மற்றும் எழுபது பைசா மட்டும்), கடன்தாரர்; **திரு. விவேகானந்தம் R M,** த/பெ. திரு. ராமனாதம் மற்றும் கூட்டு-கடன்தாரர்கள்: **திருமதி. அஞ்சனா** S M K த/பெ திரு. வேலுசாமி இருவரது முகவரி: எண் F-113, ஐரிஸ் கோர்ட், மகிந்திரா வோர்ல்டு சிட்டி, பரனூர் ரயில் நிலையம் அருகில், காஞ்சிபுரம் 603002, **அட்டவணை சொத்து விபரம் :** அனைத்து இன்றியமையாத பகுதிகளும் பாகங்களும் கொண்ட நிரந்தர குத்தகை உரிமைகளுடன்கூடிய 836 சதுர அடி பரப்பளவுள்ள ஃபிளாட் அமைவிடம்: யூனிட் .எண் B1-206, இரண்டாவது தளம், பிளாக் எண் B1, "நோவா" என்ற பெயரில் அமைந்துள்ள திட்டப்பணியில் உள்ளது. 150 சதுர அடி மொத்தம் 25,557 சதுர அடி நிலத்தில் அடங்கிய பிரிக்கப்படாத பங்கு. அமைப்புபெற்ற சர்வே எண்கள் 78A/4N (பகுதி), 103/4 (பகுதி) மற்றும் 104/1, பரனூர் கிராமம், செங்கல்பட்டு வட்டம் மற்றும் மாவட்டம் மேலும் சாலை உள்ளிட்ட பொதுவான நிலத்தின் மீதான புழக்க உரிமைகளும் இதில் அடங்கும். இச்சொத்து பரனூர், மகிந்திரா வோர்ல்டு சிட்டி-இல் அமைந்துள்ளது. இந்நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: பரனூர் கிராமத்தின் சர்வே எண்கள் 78A/4N (பகுதி), 102/4E (பகுதி), 102/3 (பகுதி) மற்றும் 102/6; தெற்கு: பரனூர் கிராமத்தின் சர்வே எண் 103/4 (பகுதி) - பாதை கிழக்கு: பரனூர் கிராமத்தின் சர்வே எண் 104/1 (பகுதி); மேற்கு: சர்வே எண்கள் 78A/4N (பகுதி), 103/4 (பகுதி) மற்றும் 103/1 (பகுதி). இச்சொத்து, செங்கல்பட்டு இணை-II சார் பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டம் ஆகியவற்றின் எல்லைக்குள் அமைந்துள்ளது.

மேற்படி கடன்தாரர்களுக்கு நாங்கள் இதன் மூலம் கோருவது யாதெனில் அவரருக்கான கோரிக்கை அறிவிப்புகளில் மேலும் குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ள தொகையுடன் அதற்கான கூடுதல் வட்டி செலவினங்கள், கட்டணங்கள் சேர்த்து முழுமையாக இந்த அறிவிப்புத் தேதியிலிருந்து 60 நாள்களுக்குள் எங்களிடம் செலுத்த வேண்டும். தவறினால், கடனுக்கு ஈடான சொத்தினை மேற்படி சட்டம் பிரிவு 13(4)-ன் கீழ் மற்றும் பொருந்துகின்ற விதிகள் கீழ் தன் சுவாதீனத்தில் (POSSESSION) எடுப்பது மட்டுமன்றி, செலவுகள் மற்றும் பின்விளைவுகள் சார்த்த ஒட்டுமொத்தமான பொறுப்பும் மேற்சொன்ன கடன்தாரர்(கள்)/ கூட்டுக்கடன்தாரர்(கள்)/ சட்ட வாரிசு(கள்) / சட்டப் பிரதிநிதிகளைச் சார்ந்தது என்ற அடிப்படையில் கடனீட்டு சொத்துகளை விற்பது உட்பட வங்கிக்கு இருக்கும் கடனீட்டு சொத்துகள் மீதான உரிமையையும் தடையின்றி பயன்படுத்தவேண்டிய அவசியம் ஏற்படும்.

மேலும், சர்ஃபாசி சட்டம் பிரிவு 13(13)-ன் கீழ், வங்கியின் எழுத்துபூர்வ முன் ஒப்புதல் இல்லாமல், மேற்படியான அடமான சொத்தினை கிரயம், குத்தகை அல்லது இதர வழி வகைகளில் உரிமை மாற்றம் செய்தல்கூடாது என்பதை கவனத்தில் கொள்ளவும். மேற்படி பிரிவை நீங்கள் மீறி நடந்து கொண்டால் சர்ஃபாசி சட்டம் பிரிவு 29ன் கீழ் வரும் தண்டனை ஷரத்துகளை பயன்படுத்த வேண்டிய மற்றும் அல்லது இது தொடர்பான பிற அனைத்து சட்ட ஷரத்துகளைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படும்

மேற்படி சட்டம் பிரிவு 13 உட்பிரிவு (8)-ன் படி மேற்படி IBL-க்கு செலுத்தவேண்டிய கடன் நிலுவையுடன் வட்டி, கட்டணங்கள், IBL-க்கு நேர்ந்த செலவுகள், செலவினங்கள் ஆகியவற்றைச் சேர்த்து, கடனுக்கு ஈடான சொத்தினை IBL விற்பதற்கு அல்லது உரிமை மாற்றி தருவதற்கு நிர்ணயிக்கப்படும் தேதிக்கு முன்னர் எந்த ஒரு நேரத்திலும் IBL-க்கு செலுத்திவிட்டால், சொத்துக்கள் விற்கப்பட்ட மாட்டாது,அல்லது உரிமை மாற்றி தரப்பட மாட்டாது, மேலும் கடனுக்கு ஈடான சொத்தை விற்பது அல்லது உரிமை மாற்றி தரும் நடவடிக்கைகள் IBL-நிறுவனத்தால் நிறுத்தப்படும்.

தேதி- 30.04.2026 — அதிகாரப்பூர்வ அலுவலர்
இடம்- செங்கல்பட்டு/ காஞ்சிபுரம் — இண்டஸ்இண்ட் பேங்க் லிமிடெட்-க்காக

DINAMANI, Chennai Phone: 23457601 Fax: 044-23457619 RNI Reg. No. 3459/60 Printed and Published by N. Gopalan on behalf of Express Publications (Madurai) Private Limited., at Express Press, "Express Gardens", 29, Second Main Road, Ambattur Industrial Estate, Chennai - 600 058. ஆசிரியர்: கே. வைத்தியநாதன் - Editor: K.Vaidiyanathan Chennai. Vol. 93, No. 119

COPYRIGHT: Express Publications (Madurai) Private Limited., All rights reserved. Reproduction in any manner, electronic or otherwise, in whole or in part, without prior written permission is prohibited.